# கிரைய உடன்படிக்கை

_________ம் வருடம் _____________மாதம் ____ம் தேதி, ______________

_____________________________________________________________________வசிக்கும் திரு_____________அவர்களின் குமாரர் சுமார் ___ வயதுள்ள திரு._________ (அடையாள அட்டை ______) (கைபேசி எண்.______) (இதுமுதற்கொண்டு இவர் கிரையம் செய்பவர் என்று அழைக்கப்படுவார்)

______________________________________________________________________

வசிக்கும் திரு.__________________________ அவர்களின் குமாரர் சுமார் _____வயதுள்ள திரு.________________ (அடையாள அட்டை ______) (கைபேசி எண்.______) (இதுமுதற்கொண்டு இவர் கிரையம் வாங்குபவர் என்று அழைக்கப்படுவார்)

(கிரையம் செய்பவர், கிரையம் வாங்குபவர் என்பது இவர்களுடைய வாரிசுகள், நிறைவேற்றுபவர்கள், ஆட்சிகை பொருந்தியவர்கள், சட்டமுறைப் பிரதிநிதிகள் மற்றும் ஒப்பளிப்பேற்றவர்கள் என இன்ன பிறரையும் உள்ளடக்கும்).

ஆக இருதரப்பினரும் சம்மதித்து எழுதிக் கொண்ட கிரைய உடன்படிக்கை ஆவணம் என்னவென்றால்.

இதன் கீழ் சொத்து விவரத்தில் விவரிக்கப்பட்டுள்ள _________ மாவட்டம், _______________ சொத்தானது விற்பனை செய்பவர் தனது சொந்த வருவாய் மற்றும் சேமிப்பைக்கொண்டு _________ தேதியிட்ட ___________ சார்பதிவக 1 புத்தக ஆவண எண்._______/____ மூலம் கிரையம் பெற்று, எந்தவிதமான வில்லங்கத்திற்கும் உட்படுத்தாமல் சர்க்கார் வரி வகையறாக்கள் செலுத்திக்கொண்டு தன்னுடய சொந்த அனுபவத்திலும் சுவாதீனத்திலும், சகல சர்வ சுதந்திர பாத்தியங்களுடனும், உரிமைகளுடனும் ஆண்டு அனுபவித்து வருகிறார்.

கிரையம் செய்பவர் தனது குடும்பச் செலவுகளை ஈடு செய்யும் பொருட்டு கீழே ஷெடியூலில் விவரிக்கப்பட்ட சொத்தை கிரையம் செய்ய

முடிவு செய்ததில், கிரையம் வாங்குபவரும் முன்வந்து கிரையம் வாங்க சம்மதம் தெரிவித்துள்ளார்.

அதன்படி கீழே ஷெடியூலில் விவரிக்கப்பட்ட சொத்தை ரூ.__________ (ரூபாய் __________)க்கு இருதரப்பினரும் கிரையம் நிச்சயித்து கீழ்கண்ட நிபந்தனைகளுக்கு சம்மதித்து எழுதிக் கொண்ட கிரைய உடன்படிக்கை ஆவணம்.

1. இந்த கிரைய உடன்படிக்கையின் காலம் இன்றைய தேதியிலிருந்து _____ மாதங்களாகும்.

2. கிரையத் தொகையில் முன்பணமாக ரூ. __________ (ரூபாய் __________ ) கிரையம் செய்பவர் இன்றைய தேதியில் கீழ்கண்ட சாட்சிகள் முன்னிலையில் கிரையம் வாங்குபவரிடமிருந்து ரொக்கமாக பெற்றுக்கொண்டார். அதனை கிரையம் செய்பவர் ஒப்புக்கொள்கிறார்.

3. மீதிக் கிரையத் தொகையான ரூ. __________ (ரூபாய்__________) கிரைய ஆவணம் பதிவு செய்யும் நாளில் செலுத்துவதாகத் தெரிவித்ததை விற்பனை செய்பவரும் சம்மதிக்கிறார்.

4. கீழ்கண்ட சொத்தின் மீது வழக்குகள், கடன்கள், முன்கிரைய உடன்படிக்கைகள், வில்லங்கங்கள் ஏதுமில்லை என இதன் மூலம் கிரையம் செய்பவர் உறுதி கூறுகிறார்.

5. கிரையம் செய்பவர் கீழ்கண்ட சொத்தினை கிரையம் செய்யும்வரை சொத்திற்குரிய வரிவகையறாக்களை நிலுவை பாக்கியின்றி செலுத்த சம்மத்திக்கிறார்.

6. கீழ்கண்ட சொத்துக்கு சம்மந்தப்பட்ட ஆவணங்களின் நகல்கள் இன்றைய தேதியில் கிரையம் செய்பவர் கிரையம் வாங்குபவரிடம் ஒப்படைக்கிறார். கிரையம் பதிவு செய்யும் நாளில் அசல் ஆவணங்களை கிரையம் வாங்குபவரிடம் ஒப்படைக்க சம்மதிக்கிறார்.

7. கிரைய ஆவணப் பதிவிற்கு தேவையான முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணத்தை ஏற்க கிரையம் பெறுபவர் சம்மதிக்கிறார்.

8. மேலே கண்ட உடன்படிக்கை கால அவகாசத்திற்குள் அனைத்து கிரைய நடவடிக்கைகளும் முடிவு செய்யப்பட்டு கிரைய ஆவணம், கிரையம்

வாங்குபவர் பெயருக்கோ அல்லது அவரது பிரதிநிதிக்கோ எழுதிக் கொடுக்க கிரையம் செய்பவர் சம்மதிக்கிறார்.

9. இந்த கிரைய உடன்படிக்கை ஆவணத்தின் மூலம் சொத்தின் சுவாதீனம் ஒப்படைக்கப்படவில்லை.

10. மேலே தெரிவித்துள்ள எந்த ஒரு நிபந்தனைகளையும் எவர் ஒருவர் மீறினாலும் பாதிக்கப்பட்டவர் அது குறித்து Specific Performance சட்டபடி நடவடிக்கை மேற்கொண்டு தீர்வுகாண இருவரும் சம்மதிக்கிறார்கள்.

இந்தப்படிக்கு நாம் இருவரும் சம்மதித்து அடியிற் கண்ட சாட்சிகள் முன்னிலையில் எழுதிக் கொள்ளும் கிரைய உடன் படிக்கை ஆவணம்.

**சொத்து விவரம்**